**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டம் - 2018**

---

யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை மற்றும் வட மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் கீழுள்ள வடக்கு மாகாண சபை ஊடாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ்டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 திசெம்பர 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 2018 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 173.03 மில்லியன் மற்றும் ரூபா 23.39 மில்லியன் கூட்டுத் தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | ரூபா 173.03 மில்லியன் வட்டி கட்டணம் மற்றும் ரூபா 23.39 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் | குறைத்தக் கூறல் | வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மீதான பதிவேடுகள் திறைசேரி வைத்திருக்கின்றது | உரிய கிரயம் மொத்த கைதவிர்ப்புக்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் கணக்கியக்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் சிவில் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 19.73 | சிவில் வேலைகளின் பெறுமதி அதிகரித்தக் கூறல் | கருத்து தெரிவிக்கப்படவில்லை | சொத்துக்களின் வேறுபட்ட பாவணைக் காலத்தைக் கருத்திற்கொள்ளாமல் வேவையான நடைமுறையல்லா சொத்தின் கீழ் பதியப்பட வேண்டும். |
| (இ) | வேறு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து மாற்றப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 8.71 | சொத்துக்களின் பெறுமதி பதியப் பட்டிருகக்வில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்தக்கள் நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| கூறு | நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் இலக்கு | அடையப்பட்டது | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| நீர் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி | பூமைவெளி, கரவெட்டி, நவினாதீவு என்பவ்றில் தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் | 03 தண்ணீர் கோபுரம் | இல்லை | செயற்திட்ட கிரயம் அதிகரிக்கும் சாத்தியம் | - | செயற்திட்ட கிரயத்தை குறைப்பதற்கு தேவையான உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | பளை, கொடிகாமம், மீசாலை, பூநகரி, புத்தூர், நாவற்குழி, காரைநகர் போன்றவற்றில் விநியோக வலையமைப்பு குழாயிடல் | 250 கிமீ | இல்லை | -மேற்படி- | 2018 ஒக்தோபரில் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| | யாழ்ப்பாண நகரப் பகுதியில் விநியோக வலையமைப்பு குழாயிடல் | 283 கிமீ | இல்லை | | ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் | 2019 ஆகஸ்ட் வரையும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | -மேற்படி- | ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| | கழிவகற்றல் வுத்திகரிப்பு பொறியில் நிர்மாணமும் பிரதான கழிவகற்றல் குழாயிடலும். | இந்த நடவடிக்கையின் கீழான வெலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை | | செயற்திட்டத்தின் நொக்கம் அடையப்படவில்லை | கடனளிக்கும் முகவர் இந்த நடவடிக்கையின் கீழான ஒதுக்கீட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார் | |

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாண நீர் முகாமைத்துவ வளத்தை வலுப்படுத்தல் | இரணைமடு குள கீழ்பகுதி உயர் அழுத்த நீர்ப்பாசன புனரமைப்பு உள்ளடங்கலாக தலைமை வேலைகள் | இந்த கூறின் கீழான வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை | இந்த கூறின் கீழான வேலைகள் இரணைமடு குளத்து தண்ணீர் பங்கிடலின் பொது மக்கள் எதிர்ப்பு, காரணமாக தாமதத்தில் இருந்தது. கடல் தண்ணீர் சுத்திகரிப்பு ஒஸ்மோசிஸ் பொறி பொருத்தப்பட வெண்டுமென பிரேரிக்கப்பட்டது. | மேலதிக கிரயம் ஏற்படல், தொழில்நுட்பம் கிடைக்காமை மற்றும் உரியகால கழிவகற்றல் போன்ற அத்தகைய விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டு 2016 இல் வழங்கப்பட்ட 42.8 கிலோமீற்றர் மதிப்பிடப்பட்ட நீளத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு பிரதான பொறி- பகுதி 01 இன் வழங்கல் மற்றும் குழாயிடலிற்கான ஒப்பந்தத்தில் 35 கிலோமீற்றர் குழாயிடல் வெலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. மேலும், 2016 இல் வழங்கப்பட்ட 144 கிலோமீற்றர் மதிப்பிடப்பட்ட நீளத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு பிரதான பொறி- பகுதி 02 இன் வழங்கல் மற்றும் குழாயிடலிற்கான ஒப்பந்தத்தில் 128 கிலோமீற்றர் குழாயிடல் வெலைகள் மாதிதரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. ஒப்பந்தங்கள் வழங்க முன்னர் முறையான நில அளவைகள் | செயற்திட்டத்தால் பிரயொகிகப்பட்ட நலிவான கண்காணிப்பு பொறிமுறை காரணமாக கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | குழாயிடல் பகுதியில் எதிர்பாராத கற்பாறை இனங்காணப்பட்டிருந்தன. இதன் விளைவால், மேலதிகமாக பாறை அகழ்தல் வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. | நோக்கெல்லையிலுள்ள மாற்றம் காரணமாக ஒப்பந்தகாரருடனான விவாதத்திற்கும் மேலதிக கிரயத்தை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தில் நீர் வழங்குதல் நோக்கில், கடல் நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்தை 2022 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்த ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் தண்ணீர் பரிமாற்ற குழாயிடல் என்பன கடல் நீர் சுத்திகரிப்பு ஒஸ்மல் பொறியின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கும் வரை பயனற்றிருந்தது. | குறித்த நன்மைகள் உரிய காலத்தில் உரிமையாளர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இரணைமடு குளத்தின் இயலளவு வேறு செயற்திட்டத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. வேறு நொக்கங்களிற்காக தண்ணீர் பயன்படுத்துவதை கருத்தில் கொள்ள வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத பொதிலும், 2017 இல் கடன் திருப்பிச் செலுத்தல் தொடங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவருக்கு ஐ.அ.டொலர் 164,564 கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது. | வேலைகளை பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக மேலதிக செலவினம் ஏற்பட வேண்டியிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கடனளிக்கும் முகவரிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை வினைத்திறனான வழியில் பயன்படுத்தவை உறுதிப்படுத்தவதற்கு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | மின்னியல் பொறியியலாளர் மற்றும் 04 உதவி பொறியியலாளர் பதவிகள் 2018 திசெம்பர் 31 இல் வெற்றிடமாக இருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கல் பாதிக்கும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக பொதிய உத்தியோகத்தருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01∴2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் இயலக்கூடியவாறு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் ஈடுபடுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அதன் கடமைகளை மேவுவதற்கு 2018 ஏப்ரலில் இருந்து செயற்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தது. | ஈடுபடுத்தப்பட செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு பொறிமுறை நலிவாக இருக்கும். | செயற்திட்ட அலுவலகத்தின் கடமைகளில் பிரதி செயற்திட்ட பணப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த பொறியியலாளர் 03 நாட்கள் செலவழிப்பதுடன் வேலைகள் நலிவாக உள்ளது. | வினைத்திறனான வழியில் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் பொறுப்புக்களை கையேற்பதற்கு இயலக்கூடியவாறு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் ஈடுபடுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |